[2003 மார்ச் 27

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த காலங்களில்தான் இதுபோன்று நில ஆர்ஜிதம் செய்து வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குகின்ற நேரத்தில் நில உரிமையாளர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று வழக்குகள் தொடுத்தார்கள். ஆனால், தற்போது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அதையெல்லாம் மாற்றி, நில உரிமையாளர்களிடம் நேரடியாகப் பேச்சுவார்த்தை மூலமாகவே நில ஆர்ஜிதத்தைப் பெற்று, வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டிருக்கிறார்கள். அதன் அடிப்படையில்தான் இப்போது வழங்கப்பட்டு வருகிறது. ஆனால் கடந்த காலத்தில் போட்ட, ஏற்கெனவே நிலுவையில் இருந்து வருகிற வழக்குகளை எல்லாம் விரைவாக முடிப்பதற்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 111, திரு. செ. அண்ணாதுரை, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

111—

போக்குவரத்து வசதி

***7371—திரு. செ. அண்ணாதுரை:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜெயங்கொண்டம் தொகுதியில் பல்வேறு பகுதிகளை இணைக்கும் வகையில் போக்குவரத்து வசதி செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஜெயங்கொண்டம் பகுதியில், கிராமங்கள் மற்றும் குக்கிராமங்களை இணைக்கும் வகையில் 29 நகரப் பேருந்துகள் மூலமாக அனைத்துப் பகுதிகளுக்கும் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது.

(ஆ) இக்கேள்வி எழாது.

2003 மார்ச் 27]

திரு. செ. அண்ணாதுரை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் தொகுதிக்கு உட்பட்ட டி.பழூர் ஒன்றியத்திலிருந்து குக்கிராமங்களுக்கு—ஜெயங்கொண்டத்திலிருந்து— இயக்கப்படும் பேருந்துகள் மிகவும் குறைவாக இருக்கின்றன. அதன் காரணமாகப் பயணிகள் மிகவும் அவதிக்குள்ளாகிறார்கள். எனவே, கிராம மக்களின் முன்னேற்றத்திற்கு வழிவகை செய்யும் தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில் கூடுதல் பேருந்துகள் விட அரசு ஆவன செய்யுமா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஜெயங்கொண்டம் பகுதியில் அரசுப் பேருந்துகள் மூலமாகவும், தனியார் பேருந்துகள் மூலமாகவும், சிற்றுந்துகள் மூலமாகவும் தேவையான கிராமங்களுக்குத் தேவையான அளவிலே பேருந்து வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுப்படையாக, இன்னும் வசதி செய்ய வேண்டும் என்று சொல்கிறார்கள். குறிப்பிட்டு, இன்னின்ன கிராமங்களுக்குப் பேருந்து வசதி இல்லை, அந்தக் கிராமங்களுக்குச் செய்ய வேண்டும் என்று கேட்பாரேயானால், அதுபற்றி அரசு சிந்திக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 112, திரு. எஸ். கே. செல்வம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

112—

புதிய கட்டடம்

***8182—திரு. எஸ்.கே. செல்வம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளதை அரசு ஏற்குமா?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

TRUTH ALONE TRIUMPHS